2018 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

டாக்டர் ப. வள்ளல் பெருமான் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் காட்டுமன்னார்கோவில் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள். மேலும், 1984–1989, 1989–1991 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

முற்பகல் 10–05

திரு. கே.பி. மணிவாசகம் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. ரா. மார்க்கபந்து அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் அணைக்கட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1995 முதல் 2001 ஆம் ஆண்டு வரையில் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

ஒகி புயலால் ஏற்பட்ட உயிரிழப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *29–11–2017 மற்றும் 30–11–2017 ஆகிய நாட்களில் கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களை பலத்த மழையுடன் ஒகி புயல் கடும் சீற்றத்துடன் தாக்கியதில், மிக கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டது குறித்தும், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள்,*

விவசாயிகள் மற்றும் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டது குறித்தும், இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் ஆகியோரை பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அனுப்பி வைத்து, மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ளவும், பிற மாநிலங்களில் கரை சேர்ந்த மீனவர்களை அவரவர் சொந்த ஊர்களுக்கு அழைத்து வரும் பணியினை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

12–12–2017 அன்று கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா 20 இலட்சம் ரூபாய், ஊனமடைந்த மீனவர்களுக்கு மறுவாழ்வு நிதியாக தலா 5 இலட்சம் ரூபாய், பயிர்ப் பாதுகாப்பு உதவி உள்ளிட்ட பல்வேறு நிவாரண உதவிகளை வழங்க உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் 19–12–2017 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டதோடு, விவசாயிகள், பொது மக்கள் மற்றும் மீனவப் பிரதிநிதிகளைச் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்தார்கள். மேலும், மத்திய அரசு, தேசிய பேரிடர் நிதியிலிருந்து முன்பணமாக உடனடியாக 133 கோடி ரூபாய் வழங்கியதோடு, மத்தியக் குழுவும் கள ஆய்வு மேற்கொண்டது. ஒகி புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கான மீட்பு, நிவாரணம் மற்றும் நிரந்தர சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 5,255 கோடி ரூபாயும், கடலோர மாவட்டங்களில் வடகிழக்கு பருவ மழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சீரமைத்து, நிரந்தர சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 4,047 கோடி ரூபாயும் மத்திய அரசு தமிழகத்திற்கு உடனடியாக வழங்க வேண்டுமென்றும், பாதிப்புகள் மிகவும் கடுமையாக இருப்பதினால், இதனை தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டுமென்றும், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். ஒகி புயலின் தாக்கத்தால் உயிரிழந்தவர்களுக்கு தனது அஞ்சலியை செலுத்திக்கொள்வதோடு, அவர்களை இழந்து வருந்தும் குடும்பத்தாருக்கும், உறவினர்களுக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

2018 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

3. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

வன ஆராய்ச்சி மையம்

***9818—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, ஜவ்வாது மலையில் வனவியல் கல்லூரி மற்றும் வன ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 ஆம் வருடம், முதல் கூட்டத் தொடரில் எனக்குப் பேச வாய்ப்பளித்த எனது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லரசை நடத்தி, எல்லோருடைய பாராட்டுகளையும் பெற்றிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) எனது பதிலை அளிக்கிறேன்.*